## முற்போக்கு புத்தகக் காட்சி – 2 நாள் கருத்தரங்கம்– ‘காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு’ நூல் வெளியீடு:

# சென்னை வள்ளுவர் கோட்டத்தில் ‘தி.மு.க. 75’ அறிவுத் திருவிழா!

## முதலமைச்சர் இன்று தொடங்கி வைக்கிறார்!

### தி.மு.கழக இளைஞர் அணி சார்பில் சிறப்பான ஏற்பாடுகள்!

**சென்னை, நவ. 8-**

**தி.மு.கழகப் பவளவிழாவை, கழக இளைஞர் அணி `தி.மு.க. 75 அறிவுத் திருவிழா’வாகக் கொண்டாடவிருக்கிறது. இதுகுறித்து கழக இளைஞர் அணி சார்பில், வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:**

திராவிட முன்னேற்றக்கழகம் தொடர்ந்து அறிவுச்செயற்பாடுகளை முன்னெடுக்கும் இயக்கம் என்பது தாங்கள் அறிந்ததே. தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரை வழிகாட்டிகளாகக் கொண்டு கழகத்தலைவர், முதலமைச்சரின் வழிகாட்டலில் கழக இளைஞர் அணிச்செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் முன்னெடுப்பில் திராவிட மாடல் பயிற்சி பாசறைக் கூட்டங்கள், சட்டமன்றத் தொகுதிதோறும் கலைஞர் நூலகம், `முரசொலி’ பாசறைப் பக்கம், `முத்தமிழறிஞர் பதிப்பகம்’, இளம் பேச்சாளர்களைத் தேர்ந்தெடுத்து கருத்தியல் பயிற்சி அளிப்பது, கலைஞர் மாணவப் பத்திரிகையாளர் திட்டம், கலைஞர் நிதிநல்கை திட்டம் ஆகிய கருத்தியல் பணிகளைத் தொடர்ந்து முன்னெடுத்து வருகிறது.

**கழகத்தின் 75–வது ஆண்டு**

இதன் தொடர்ச்சியாக கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் 75–வது ஆண்டு நிறைவை முன்னிட்டு, கழக இளைஞர் அணி `தி.மு.க 75 அறிவுத்திருவிழா’ என்னும் மாபெரும் நிகழ்ச்சியை முன்னெடுக்கிறது.

சென்னை வள்ளுவர் கோட்டத்தில், தி.மு.க இளைஞர் அணி முன்னெடுக்கும் `தி.மு.க 75 - அறிவுத் திருவிழா’ என்னும் மகத்தான நிகழ்ச்சியில், 08.11.25 அன்று காலை 9.30 மணியளவில் கழகத்தலைவர், முதலமைச்சர் அவர்கள் ‘காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு’ நூலை வெளியிட்டு, ‘இருவண்ணக்கொடிக்கு வயது 75’ கருத்தரங்கத்தையும் ‘முற்போக்கு புத்தகக்காட்சி’யையும் தொடங்கி வைக்கவுள்ளார்.

**அறிவார்ந்த ஆவணம் வெளியீடு**

75 ஆண்டுக்கால வரலாறு கொண்ட தி.மு.கழகம் அரசியல், சமூகம், பொருளாதாரம், பண்பாட்டுத்தளங்களில் ஏற்படுத்திய தாக்கங்கள் குறித்து எழுத்தாளர்கள், சமூகச்செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள், சமூக மற்றும் அரசியல் இயக்கங்களைச் சேர்ந்தவர்கள், தேசிய கட்சித் தலைவர்கள், கழகத்தலைவர் உள்ளிட்ட தி.மு.க தலைமைக்கழக நிர்வாகிகள் எழுதிய கட்டுரைகள் அடங்கிய, 1,120 பக்கங்கள் கொண்ட `காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு’ என்னும் புத்தகம், முத்தமிழறிஞர் பதிப்பகத்தின் சார்பில் உருவாகியுள்ளது.

இந்த அறிவார்ந்த ஆவணத்தை முதலமைச்சர் அவர்கள் வெளியிட, கழகப் பொதுச்செயலாளர் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பெற்றுக் கொள்கிறார். கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி, கழக முதன்மைச்செயலாளர் மாண்புமிகு கே.என்.நேரு, கழகத்துணைப் பொதுச்செயலாளர்கள், கழக இளைஞர் அணிச்செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் கழக இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் முன்னிலை வகிக்கும் இந்த விழாவில் `தன்மானம் காக்கும் கழகம்’ என்னும் மேடை நாடகமும் நடைபெறவுள்ளது.

**இரு நாள் கருத்தரங்கம்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கிவைக்கும் `இருவண்ணக்கொடிக்கு வயது 75’ என்னும் கருத்தரங்கம் பத்து அமர்வுகளுடன் 08.11.25 மற்றும் 09.11.25 ஆகிய இருநாட்கள் நடைபெறவிருக்கிறது.

கழகத்துணைப்பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி, கழக அமைப்புச்செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, முன்னாள் திட்டக்குழு துணைத்தலைவர் பேராசிரியர் மு.நாகநாதன், நிதியமைச்சர் தங்கம் தென்னரசு, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், கழகக் கொள்கைபரப்புச்செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ, திராவிட இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசு, சென்னை இதழியல் நிறுவனத்தின் தலைமை இயக்குநர் ஏ.எஸ்.பன்னீர்செல்வன், கழகத் தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர் கோவி.லெனின், கழகக் கல்வியாளர் அணி தலைவர் செந்தலை கவுதமன் ஆகியோர் தலைமை வகிக்கும் இந்த அமர்வுகளில் கழகத்துணைப் பொதுச்செயலாளர் திருச்சி சிவா எம்.பி, கழகத்துணைப் பொதுச்செயலாளர் ஆ. இராசா எம்.பி, கழகக் கொள்கை பரப்புச்செயலாளர் முனைவர் இரா.தி.சபாபதி மோகன், கழக மருத்துவ அணிச்செயலாளர் மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ, மாநில திட்டக்குழு செயல் துணைத்தலைவர் பேராசிரியர் ஜெயரஞ்சன், திராவிடர் விடுதலைக்கழகத் தலைவர் கொளத்தூர் மணி, திராவிடர் கழகத்துணைப் பொதுச்செயலாளர் சே.மெ.மதிவதனி உள்ளிட்ட பலர் கருத்துரை வழங்கவிருக்கின்றனர். 09.11.25 அன்று துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கருத்தரங்க நிறைவுரை ஆற்றவுள்ளார்.

**முற்போக்கு புத்தகக்காட்சி**

தமிழ்நாட்டிலேயே முதல் முயற்சியாக மார்க்சியம், பெரியாரியம், அம்பேத்கரியம், தமிழ்த்தேசியம், பெண்ணியம் போன்ற முற்போக்கு அரசியல் சார்ந்த புத்தகங்கள் மட்டுமே இடம்பெறும் `முற்போக்கு புத்தகக்காட்சி’யைக் கழக இளைஞர் அணி முன்னெடுக்கிறது. குளிரூட்டப்பட்ட அரங்கத்தில் 46 பதிப்பகங்களின் 58 அரங்குகள் அமைக்கப்பட்டுள்ள இந்த முற்போக்கு புத்தகக்காட்சியில் அனுமதி இலவசம்.

08.11.25 முதல் 16.11.25 வரை நடைபெறவிருக்கும் `முற்போக்கு புத்தகக்காட்சி’யில் தினந்தோறும் புத்தர் கலைக்குழு, புதுகை பூபாளம் கலைக்குழு, கோவன் கலைக்குழு, பாப்பம்பாடி ஜமா, நிகர் கலைக்கூடம், மாற்று ஊடக மையம் கலைக்குழு ஆகிய கலைக்குழுக்களின் கலைநிகழ்ச்சிகளும் பகுத்தறிவு மேஜிக் நிகழ்ச்சியும் நடைபெறவுள்ளன. இத்துடன் கழகக் கொள்கைபரப்புச் செயலாளர் திண்டுக்கல் ஐ. லியோனி, திராவிடர் கழகப்பிரச்சார செயலாளர் வழக்கறிஞர் அ. அருள்மொழி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி துணைப் பொதுச்செயலாளர் ஆளூர் ஷாநவாஸ், த.மு.எ.க.ச பொதுச்செயலாளர் எழுத்தாளர் ஆதவன் தீட்சண்யா, கவிஞர் யுகபாரதி, கவிஞர் சுகிர்தராணி ஆகிய முற்போக்குச் சிந்தனையாளர்களின் உரைவீச்சும் நடைபெறுகின்றன.

`தி.மு.க. 75 அறிவுத்திருவிழா’ நடைபெறவிருக்கும் இரு வாரங்களும் குடிநீர் வசதி, கழிவறை வசதி, வாகன நிறுத்த வசதி உள்ளிட்ட அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

முற்போக்குச் சிந்தனைகளை முன்னெடுப்பது, இளைஞர்களிடம் அரசியல் உணர்வை வளர்த்தெடுப்பது, வாசிப்பைப் பரவலாக்குவது ஆகிய நோக்கங்களைக் கொண்ட `தி.மு.க 75 அறிவுத்திருவிழா’வின் இந்த மகத்தான மூன்று நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அழைக்கிறோம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.11.2025) சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நடைபெற்ற இந்திய கேம் டெவலப்பர்ஸ் சங்கம் மற்றும் தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை இணைந்து நடத்தும் 17ஆவது இந்திய கேம் டெவலப்பர்ஸ் 2025 மாநாட்டினை பார்வையிட்டார். இந்நிகழ்வில் அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை முதன்மைச் செயலாளர் பிரஜேந்திர நவ்னித், எல்காட் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கா.ப.கார்த்திகேயன், இந்திய கேம் டெவலப்பர்ஸ் சங்கத்தின் நிர்வாகிகள் ஸ்ரீதர் முப்பிடி, மன்வேந்ரா சுக்குல் மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர்.



சேலம் மாவட்டம், வனவாசியில் ரூ.5 கோடி மதிப்பீட்டில் சிறிய அளவிலான கைத்தறி பூங்காவினை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் மற்றும் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி ஆகியோர் நேற்று (07.11.2025) அடிக்கல் நாட்டி வைத்து, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன், நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் எஸ்.ஆர்.சிவலிங்கம், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, கைத்தறி துறை இயக்குநர் திருமதி மகேஸ்வரி ரவிக்குமார், சேலம் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார், கைத்தறித் துறை இணை இயக்குநர் ஆர்.கணேசன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் கைத்தறி நெசவாளர்கள் உள்ளனர்.

### நாடாளுமன்றத்தில் முழங்கிடும் தங்களது அரசியல் தொண்டும்

# திரையாளும் கலைத் தொண்டும் மென்மேலும் சிறந்திட வாழ்த்துகிறேன்!

## மக்கள் நீதி மய்யத் தலைவர் கலைஞானி கமல்ஹாசனுக்கு – முதல்வர் மு.க.ஸ்டாலின், பிறந்தநாள் வாழ்த்து!

சென்னை, நவ. 8 -

மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹாசன் அவர்களின் பிறந்தநாளையொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்து தெரிவித்து வெளியிட்டுள்ள சமூக வலை தளப் பதிவு வருமாறு:-



**பன்முகத்திறமையோடு தமிழ்த் திரையுலகை உலகத் தரத்துக்குக் கொண்டு சென்றிடும் தீராத கலைத்தாகமும் பன்முகத்தன்மை மிக்க நம் நாட்டை நாசகர பாசிச சக்திகளிடமிருந்து மீட்கும் தணியாத நாட்டுப் பற்றும் கொண்டு, என் மீது அளவற்ற அன்போடு தோழமை பாராட்டும் மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் - கலைஞானி கமல்ஹாசன் அவர்களுக்கு அன்பு நிறை பிறந்தநாள் வாழ்த்துகள்!**

**நாடாளும் ஆட்சியாளர்கள் நெறி பிறழாது நடந்திட, நாடாளுமன்றத்தில் முழங்கிடும் தங்களது அரசியல் தொண்டும், திரையாளும் தங்களது கலைத் தொண்டும் மென்மேலும் சிறந்திட வாழ்த்துகிறேன்!**

இவ்வாறு அந்த வாழ்த்துச் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### சேலம் அயோத்தியாபட்டணம் மாவட்டப் பிரதிநிதி

# அகரம் ராஜேந்திரன் இல்ல மணவிழா!

#### அமைச்சர் இரா.இராஜேந்திரன் – எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. – டி.எம்.செல்வகணபதி எம்.பி. – தே.மலையரசன் எம்.பி. வாழ்த்து!

சேலம், நவ.8–

சேலம் மாவட்டம், அயோத்தியாபட்டணம் மாவட்டக் கழக பிரதிநிதி அகரம் ராஜேந்திரன் மகன் ஏ.ஆர். தென் பாண்டியன், பூரணி திருமண வரவேற்பில் சேலம் மத்திய மாவட்டச் செயலாளர், அமைச்சர் இரா.இராஜேந்திரன், சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி., சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் டி.எம். செல்வ கணபதி எம்.பி., கள்ளக்குறிச்சி தே.மலையரசன் எம்.பி.,

கழக நிர்வாகிகள் மு.ரா.கருணாநிதி, ஏ.ஏ.ஆறுமுகம், சின்ன துரை, விஜயகுமார் உட்பட நிர்வாகிகள் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.

